னால் மாட்டு வண்டியில் வரவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தால் இதை தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து தானிப்பாடியில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தை முன்னுரிமை தந்து அமைத்துத் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களைக் கொண்ட குழு ஒன்று தானிப்பாடி கிராமப் பகுதிக்குச் சென்று அங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் நிலை, அங்கே விளையும் விளை பொருட்கள் ஆகியவற்றைப் பற்றி ஆய்வு செய்து அறிக்கை தருவார்களானால் அந்த அறிக்கையில் புதிய ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் அமையக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கும் என்று அவர்கள் குறிப்பு தருவார்களானால் அரசின் நிதிநிலைமைக்கு ஏற்றவாறு பணி துவக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 14, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு பால் மற்றும் பால்வளத் துறை அமைச்சர்.

14—

சிவகாசி கூட்டுறவுப் பால்பண்ணைக்குக் கூடுதலாகப் பால் வழங்குதல்.

*21576—திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி கூட்டுறவுப் பால் பண்ணைக்குக் கூடுதலாக பால் வழங்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

(இ) எவ்வளவு கூடுதலாக வழங்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கூட்டுறவு பால் பண்ணைகளுக்கு அரசு பால் வழங்குவதில்லை.

(ஆ) மற்றும் (இ): இந்தக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம்தான் இருக்கிறது. அந்தப் பால் உற்பத்தியளார் கூட்டுறவுச் சங்கத்திற்கு நாள்தோறும் எவ்வளவு பால் வெளியிலிருந்து அனுப்பப்படுகிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி நகரத்திற்கு, சிவகாசி கூட்டுறவுப்பால் உற்பத்தியாளர் சங்கம் பால் விநியோகம் செய்து வருகிறது. நாளொன்றுக்கு அங்கு 8 ஆயிரம் லிட்டர் பால் தேவைப்படுகிறது. அதிலே 4 ஆயிரம் லிட்டர் பாலை சிவகாசி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் விற்பனை செய்கிறது. மீதமுள்ளதை தனியார்கள் விற்பனை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோடைக் காலங்களிலே அங்கேயுள்ள கன்ஸ்யூமர்களுக்கு பால் கொடுக்க முடியவில்லை. தட்டுப்பாடு ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையிலே இங்கே கொடுக்கப்படுகின்ற 8 ஆயிரம் லிட்டர் பாலையும் அங்குள்ள பால் உற்பத்தியாளர் ஒன்றிய சங்கங்களின் மூலமாக வெளியிலே இருந்து தருவிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்த்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவன செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 15 டாக்டர் ஜெய்சன் ஜேக்கப் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

15—

இலவசத் தையல் இயந்திரம் பெறும் பெண்களின் வயதுவரம்பு.

* 22320—டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமூகநலத் துறை மூலம் இலவசத் தையல் இயந்திரம் பெறும் பெண்களுக்கு அதைப்பெற வயது வரம்பு ஏதேனும் உண்டா?